WALLUR BRANCH LIBRARY
MUNICIPAL COUNCIL
JAFFNA

Registered as a Newspaper

BECON (ஸ்ரீதர் சினிமா முன்பாக)
156/3 ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.
88 A/L
2 வது பிரிவு
விலங்கியல் - திரு. தம்பிராஜா
தாவரவியல் - திரு. சர்வானந்தா
பௌதிகவியல் - திரு. யோகானந்தா
இரசாயனவியல் - திரு. அன்ரன்
ஆரம்பம் 16 8 86 8 30
(சனி)

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/-

88 A/L
2 வது பிரிவு
பொருளியல் - திரு. வரதராஜன்
கணக்கியல் - திரு. மரியதாசன்
வர்த்தகம் - திரு. ரட்ணம்
அளவையியல் -
திரு. எஸ். எம். ஜினேசன்
இந்துநாகரிகம் -
திருமதி. அருள்நங்கை
தமிழ் - திரு. நாகேஸ்வரன்
புவியியல், அரசியல், -
பிரபல ஆசிரியர்கள்
ஆரம்பம் - 17.8 86 9 மணி
(ஞாயிறு)
87 A/L 3வது பிரிவு
16 8.86 8 30 மணி

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆவணி மீ 1 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1406 துல்ஹஜ் பிறை 10 (17-08-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 232

சிறப்புச் செய்தி

# ஆயுத தொழிற்சாலை: யுகோ.வுடன் பேச்சு

## அரசு அதிகாரிகளுக்கு அனுமதி

கொழும்பு, ஆகஸ்ட் 17

ஆயுத உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை இலங்கையில் நிறுவுவது தொடர்பாக யூகோஸ்லேவேகியாவுடன் பேச்சு நடத்த இலங்கை அரசு, தனது அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

சிறாக ஆயுதத் தொழிற்சாலை ஒன்றை நிறுவ உதவுவதாக யூகோஸ்லோவேகியா விருப்பம் தெரிவித்திருந்தது.

அவ்விருப்பம் குறித்து பரிசீலனை செய்ய இலங்கை அரசு தனது அதிகாரிகளுக்கு அண்மையில் அனுமதி வழங்கியுள்ளது.

இப்படி வெளிநாட்டமைச்சு வட்டாரங்கள் மூலம் தெரிய வந்தது.

சீனத்தலைவர் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்தபோது சிறாக ஆயுதத் தொழிற்சாலை ஒன்றை நிறுவ உதவும்படி இலங்கை அரசு வேண்டுகோள் விடுத்திருந்தது.

அந்த வேண்டுகோளை சீனா ஏற்றுக்கொள்ள

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் 'ஹெலி' சுட்டது

யாழ்ப்பாணம், ஆக.17

நீண்ட நாட்களின் பின்னர் நேற்று ஹெலிக்கொப்டர் ஒன்று கனகபுரம், உருத்திரபுரம், ஜெயந்திநகர்ப் பகுதிகளை வட்டமிட்டுச் சுட்டது.

சுமார் 30 நிமிடங்கள் வரை சுற்றிச் சுற்றி நோட்டமிட்ட ஹெலிக்கொப்டர் பின்னர் சுமார் பதினைந்து நிமிடங்கள் வரை சுட்டது.

இதில் ஏற்பட்ட சேத விவரங்கள் ஏதும் தெரியவரவில்லை (இ)

முச்சந்தி முரளி



ஓகோ...... பின்னேரிய முக்கிழமை போட்ட கொழும்பில் கலவரக் கலகப்புத் தொடங்குமோ அல்லது அமைதியா நடக்குமோ......?

## கரை சேராத மீனவர்கள்

காங்கேசன்துறை, ஆகஸ்ட் 17

தாளையடியில் இருந்து கடந்த 8 ஆம் திகதி மீன் பிடிக்கச் சென்ற இருவர் இன்னும் கரை திரும்பவில்லை.

வடிவேலு என்னும் 5 பிள்ளைகளின் தந்தையும், லிங்கம் என்னும் 5 பிள்ளைகளின் தந்தையுமே கரை சேராதவர்கள் ஆவர். (இ-58)

# கொழும்பில் பாதுகாப்பு பலமடைகிறது

## வியாழன் சிறிமா தலைமையில் மாபெரும் எதிர்ப்புக் கூட்டம்

கொழும்பு, ஆகஸ்ட் 17

கொழும்பு மாநகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. மாகாணசபை யோசனைகளை எதிர்த்து 27 அமைப்புகள் சேர்ந்து நடத்தும் மாபெரும் எதிர்ப்புக் கூட்டம் எதிர் வரும் வியாழக்கிழமை (21 ஆம் திகதி) நடைபெற உள்ளது. அதனை ஒட்டியே கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டு வருகிறது.

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமை வகிக்கும் இக் கூட்டம் நுகேகொடையில் நடைபெறவுள்ளது இக் கூட்டத்தைப் பெரிய அளவில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை, 27 சிங்கள பௌத்த கலாசார அமைப்புக்கள் செய்து வருகின்றன. மகாசங்கமும் பின்னணியில் இருந்து உதவுகின்றது. (அ-எ)

புலிகள் தாக்குதல்:

## பாலத்துக்கு அப்பால் செல்லமுடியாத நிலையில் அரச படையினர்

திருகோணமலை, ஆக. 17

தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல் காரணமாக திருகோணமலைக்கு வடக்கே சாம்பல்தீவு பிள்ளைகுளப் பாலத்துக்கு அப்பால் செல்ல முடியாத நிலையில் ஆயுதப்படையினரில் ஒரு பகுதியினர் நேற்று முன்று முறை திரும்பினர் மற்றவர்கள் அவ்விடத்திலேயே நின்றுகொண்டிருந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஆயுதப்படையினருக்கும் இடையே ஏற்பட்டமோதலைத் தொடர்ந்து, நேற்றும் ஆயுதப்படையினர் பிள்ளைகுளப் பாலத்தைத் தாண்டி சாம்பல் தீவுக் கிராமத்துக்குச் செல்ல முயற்சித்தனர்.

அப்போது இரு தரப்பினருக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது.

துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் திருமலை நகருக்கும் கேட்டன.

சில மணித்தியாலங்களின் பின்னர் படையினரில் ஒரு பகுதியினர் திருமலை முகாமுக்குத் திரும்பி விட்டனர். ஏனையோர் அங்கேயே நின்றனர் என தமிழீழ விடுதலைப் புலிகளின் அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது (இ)

## முஸ்லிம் ஒருவர் பலி

திருகோணமலை, ஆக 17

சாம்பல்தீவுப் பகுதியில் நேற்று முன்தினம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஆயுதப்படையினருக்கும் இடையே நடந்த மோதலின் போது, நிலாவெளிக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான லொறி ஒன்றில் கோதுமைமா கொண்டு சென்ற முஸ்லிம் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

மா கொண்டு போன லொறி சேதமடைந்த பிள்ளைகுளப் பாலத்தடியில் நிறுத்தப்பட்டு அதன் பின்னர் மறுபக்கத்தில் நின்ற இன்னொரு லொறியில் மா ஏற்றப்பட வேண்டும்.

அப்படி ஏற்றிக் கொண்டிருக்கும் போது ஆயுதப்படையினருக்கும் புலிகளுக்கும் அப்பகுதியில் மோதல் நடைபெற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், ஆக 17

சாம்பல்தீவில் கடந்த வெள்ளிக்கிழமை படையினருடன் நடந்த மோதலில் காயமடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான சீலன் மரணம் அடைந்தார்.

சீலனுக்கு தமது வீர வணக்கத்தைத் தெரிவிப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது. (இ)

## மினிபஸ்ஸில் வந்த கமாண்டோக்கள் சுட்டு 2 போராளிகள் மரணம்

### இதுவரை 339 பேர் பலி

யாழ்ப்பாணம், ஆக. 17

மினி பஸ்ஸில் வந்த கமாண்டோக்கள் சுட்டதில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த இருவர் மரணம் அடைந்தனர்

இது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கை வருமாறு:-

மட்டக்களப்பு மாவட்டம் வந்தாறுமூலைக்கும் குமாரம் துறைக்கும் இடைப்பட்ட பகுதியொன்றினூடாக கடந்த 12 ஆம் திகதி எமது உறுப்பினர் இருவர் சென்று கொண்டிருந்த சமயம் எதிர்பாராத விதமாக மினி பஸ் ஒன்றில் அவ்வழியாக வந்த கமாண்டோக்கள் சுட்டனர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அரசு-கூட்டணிப்பேச்சு

## இன்று காலையும் மாலையும் நடக்கும்

கொழும்பு, ஆக.17

அரசு — கூட்டணிப் பேச்சுக்கள் இன்று காலையும் மாலையும் நடைபெறும்.

பண்டாரநாயக்கா சர்வதேசமாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் காலைப் பேச்சுக்கள் 10 மணிக்கு ஆரம்பமாகும் மாலைப் பேச்சுக்கள் 5 மணிக்கு ஆரம்பமாகும்

நேற்றுக் காலை 10 மணிக்கு ஆரம்பமான அரசு—கூட்டணிப் பேச்சுக்கள் இரண்டரை மணித்தியாலங்கள் வரை இடம்பெற்றன

நேற்று நடந்த பேச்சுக்களில் கூட்டணித் தூதுக் குழுவில் மட்டக்களப்பு, அம்பாறைக் கூட்டணிப் பிரமுகர்களான திரு பி. ஜோசப் திரு ஆ. வேல்முருகு ஆகியோர் கலந்து கொண்டனர்.

நேற்றைய பேச்சுக்களின்போது காரணங்களுக்கு உரிய அறி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றைய பேச்சுக்கள் மந்தமான சூழ்நிலையில்

கொழும்பு, ஆக 17

அரசாங்க— கூட்டணி தூதுக்குழுக்களுக்கிடையே நேற்று நடந்த பேச்சுக்கள் மிகவும் மந்தமான நிலையில் இருந்ததாக அறியப்படுகிறது.

இனப்பிரச்சினை சம்பந்தமாக தீர்வு காணும் பொருட்டு இரு சாராருக்கும் இடையில் இப்போது இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் நடந்து வருகின்றன.

இரண்டாவது நாளான நேற்று மிகவும் மந்தமான சூழ்நிலையில் இருந்ததாக அறியப்படுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டாரங்கள் நேற்றைய பேச்சுக்கள் குறித்துத் தகவலோ கருத்தோ தெரிவிக்க மறுத்துவிட்டன

அரசாங்க வட்டாரங்களும் அவ்வாறே தெரிவித்தன.

முன்னர் ஆராயப்பட்ட விடயங்களில், முட்டுக்கட்டையாக உள்ள விடயங்களில் உள்ள சொற்பதங்களை மாற்றம் செய்வது சம்பந்தமாகவே நேற்றைய பேச்சுக்கள் அமைந்ததாக உதயனுக்குத் தெரியவந்தது.

இதற்கிடையில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 3 மாதத்துக்கு பின் மீனவர் மூவர் விடுதலை

வல்வெட்டித்துறை ஆக 17

மூன்று மாதங்களுக்கு முன்னர் மீன் பிடிக்கச் சென்றபோது காணாமற் போன மூவர் பலாலி இராணுவ முகாமுக்கு அருகே வைத்து வெள்ளிக்கிழமை விடுவிக்கப் பட்டனர்

க தர்மகுமார், ச. நகுலி, க, கணேசமூர்த்தி ஆகியோரே இம் மூவரும் ஆவர் (இ-மி)

### சுபநேரம்

17—08—1986

ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்:-

9.05 முதல் 10 .35 வரை

ராகுகாலம்:

4.35 முதல் 6 05 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

பிரதோஷ விரதம்

ஹஜ்ஜுப் பெருநாள்

இலங்கைத் தமிழ் அகதிகள்

## புறப்பட்ட இடம் பற்றிய சர்ச்சை நீடிக்கிறது

ஹம்பர்க், ஆகஸ்ட் 16

இலங்கைத் தமிழ் அகதிகளை கனடாவுக்கு ஏற்றிச் சென்ற கப்பல் மேற்கு ஜெர்மனியில் இருந்து புறப்பட்டதா? இந்தியாவில் இருந்து புறப்பட்டதா? என்ற சர்ச்சை நீடிக்கிறது.

இந்தியாவில் இருந்து தான் வந்தோம் என்று கனடா சென்றுசேர்ந்த தமிழ் அகதிகள் கூறுகின்றனர்.

ஆனால் இந்த அகதிகள் மேற்கு ஜெர்மனியில் இருந்து தான் புறப்பட்டனர் என்று மேற்கு ஜெர்மன் பொலீஸார், அங்குள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை ஆதாரம் காட்டித் தெரிவிக்கின்றனர்.

இதே வேளை —

இச் சம்பவம் தொடர்பாக மேற்கு ஜெர்மன் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இரு இலங்கையர்களில் ஒருவர் முஸ்லிம் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (இ-எ)

யால தாக்குதலை அடுத்து

## உல்லாசப் பயணிகள் கொழும்பு திரும்பினர்

### பங்களாக்களும் மூடப்பட்டன

கொழும்பு, ஆக. 17

யால வனவிலங்குச் சரணாலயத்தில் தங்கியிருந்த வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் உடனடியாக கொழும்புக்குத் திரும்பிவிட்டனர்.

போராளிகள் சரணாலய வழிபயர்கள் மீது நேற்று முன் தினம் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து, சரணாலயத்தில் உள்ள உல்லாசப் பயணிகளுக்கான பங்களாக்கள் எல்லாம் மூடப்பட்டு விட்டன.

போராளிகளின் தாக்குதல்கள் நேற்று முன் தினம் காலையில் இருந்து நண்பகல் வரை நீடித்தது.

நிலைமையைச் சமாளிக்க பொலிஸ் சிப்பாய்கள் தங்காலை, திஸ்ஸ

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பாகிஸ்தானில் ஐவர் பலி

புதுடில்லி, ஆகஸ்ட் 16

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் பெனசிர் பூட்டோ ஆதரவாளர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் நடந்த மோதலில் ஒரு பொலிஸார் உட்பட ஐவர் கொல்லப்பட்டனர்.

(3 ஆம் பக்கமும் பார்க்க)

நேற்று: மூன்று

# கல்முனைப் பகுதியில் இதுவரை 12சடலங்கள் கரை ஒதுங்கின

கல்முனை, ஆக.17

கல்முனைக் கடலோரத்தில் கடலில் மிதந்து வந்து கரை ஒதுங்கிய தமிழர்களின் சடலங்களின் எண்ணிக்கை 12ஆக அதிகரித்து உள்ளது

நேற்று மட்டும் 3 தமிழர்களின் சடலங்கள் கல்முனை கடற் கரையில் ஒதுங்கின அவற்றில் ஒன்று பெண்ணுடையது

ஏனைய சடலங்கள் பாண்டிருப்பு, நீலாவணை மருதமுனை, கல்லடி கடற் கரைகளில் ஒதுங்கின என்று அறிவிக்கப்பட்டுள்ளது

இச்சடலங்களில் வெட்டுக் காயங்கள், துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன

வெளியூர்களில் இருந்து வந்து கல்முனையில் உள்ள அரிசி ஆலைகளில் வேலை பார்க்கும் தமிழ்த்தொழிலாளர்களின் சடலங்களே இவை என்று கூறப்படுகின்றது

அதனால் அடையாளம் காணப்படாத நிலையில் சடலங்கள் புதைக்கப் பட்டன.

இப்படிப் புதைக்கப் பட்ட 3 தமிழர்களின் சடலங்கள் பாண்டிருப்பில் நேற்று முன்தினம் தோண்டி எடுக்கப்பட்டன பிரேத பரிசோதனை முடிவடைந்தவுடன் மீண்டும் சடலங்கள் புதைக்கப்பட்டன.

இதனிடையில் முஸ்லிம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆலயம் குண்டு வைத்து தகர்ப்பு

யாழ்ப்பாணம், ஆக 17

பண்ணை வீதியின் ஓரம் பக்கமாக அமைந்திருக்கும் குருநகர்த்தீவு புனித அந்தோனியார் ஆலயம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது.

இவ்வாலயம் நாவாந்துறை புனித பரலோக மாதா ஆலயப் பங்கு மக்களால் பரிபாலிக்கப்பட்டு வந்தது.

வருடாவருடம் பாலைதீவு, கச்சதீவு உற்சவம்

(4ஆம் பக்கம் பார்க்க)

திருமலை துறைமுக அதிகாரசபை:

## மீண்டும் தாக்கப்படும் என்ற தகவலை அடுத்து கடற்படை ரோந்து

திருகோணமலை ஆக. 17

திருகோணமலை துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான கட்டடங்கள் மீண்டும் தாக்கப்படும் என்ற தகவலைத் தொடர்ந்து, திருமலைத் துறைமுகத்தில் நேற்று முன் தினம் இரவு தொடக்கம் நேற்று அதிகாலை வரை கடற்படையினர் தீவிர ரோந்தில் ஈடுபட்டனர்.

இது இவ்வாறிருக்க மட்டக்கோவ் இறங்கு துறையில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் இடம் பெற்றது.

இதனிடையில் திருமலை துறைமுக அதிகாரசபை முகாமையாளர் திரு. செழுனின் வீட்டுக்கு முன் காணப்பட்ட பார்சல் ஒன்று நேற்றுக்காலை அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

ஆயுதப்படையினர் பார்சலைச் சோதித்தபோது உள்ளே செருப்பு ஒரு ஜோடிதான் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது. (இ-எ-150)

இளைய தலைமுறையின் இதயம் வெல்லும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கில் வீதிப் போக்குவரத்து

## மோட்டார் சைக்கிள் விபத்து அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 17

வடக்கில் மோட்டார் சைக்கிள் விபத்து மிகவும் அதிகரித்து வருகிறது.

கடந்த இரண்டு தினங்களில் மட்டும் பல இடங்களில் நடைபெற்ற மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் சிக்கிப் படுகாயமடைந்த சுமார் பத்துப்பேர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

விபத்துக் காரணமாக பலரின் கை, கால்கள் முறிந்திருக்கின்றன.

வெள்ளியன்று மட்டும் மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கிய நான்கு பேர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

விபத்துக்களில் சிக்குபவர்களில் அனேகமானவர்கள் பூரண சாரதிப் பயிற்சி பெறுதவர்கள் என்றும், அதிக வேகமாக மோட்டார் சைக்கிள் ஓட்டுபவர்கள் என்றும் கூறப்படுகிறது. (உ-10)

## தொண்டா மீண்டும் தமிழகம் செல்கிறார்

கொழும்பு, ஆக. 17

அமைச்சர் தொண்டமான் மீண்டும் இம்மாதம் 19 ஆம் திகதி தமிழகம் செல்கிறார்.

மத வைபவம் ஒன்றில் கலந்து கொள்ளவே அவர் அங்கு செல்கிறார் என்று கூறப்படுகிறது.

பேரனின் திருமணத்திற் கலந்து கொள்ளவே கடந்தமாதம் அவர் தமிழகம் சென்றிருந்தார். (உ-எ)

## பொதுக் கூட்டம்

பருத்தித்துறை, ஆக. 17

கூ. புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சேஷ பொதுக்கூட்டம் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சங்கப் பணிமனையில் சங்கத் தலைவர் திரு. க. நடராசா தலைமையில் நடைபெறும். (இ-118)

## இறக்குமதியை நிறுத்துமாறு கோரிக்கை

கொழும்பு, ஆக. 17

செத்தல் மிளகாய், பம்பாய் வெங்காயம் ஆகியவற்றை இறக்குமதி செய்வதை நிறுத்தும்படி விவசாய அதிகாரசபை, வர்த்தக அமைச்சைக் கேட்டுள்ளது.

உற்பத்தியாளர்கள் நலன்கருதி இவ் விளைபொருள்களின் இறக்குமதி நிறுத்தப்பட வேண்டும். விவசாய அதிகார சபைத்தலைவர் ரஞ்சன் விஜயரத்தின வர்த்தக அமைச்சை வற்புறுத்தி இருக்கிறார். (உ-எ)

## அராலித்துறைக்கு இ. போ. ச பஸ்

வேலணை, ஆக 17

வடபிராந்திய போக்குவரத்துச் சபை தீவுப் பகுதி மக்களின் நன்மை கருதி யாழ்ப்பாணம் - அராலி துறைமுகத்திற்கு பஸ் சேவையை இந்த வாரத்திலிருந்து நடத்தி வருகின்றது. (இ)

மீனவர் பட்டினியால் வாடும் போது

# மீன்பிடிப்படகு பதிவை புதுப்பிக்கக் கோருவது நியாயமா?

## கடற்றொழில் விரிவாக்க அதிகாரிக்குக் கடிதம்

காங்கேசன்துறை, ஆக. 17

கண்காணிப்பு வலயத்தினுல் பாதிக்கப்பட்டு பட்டினியால் வாடும் எம்மிடம் மீன்பிடிப் படகுகளின் பதிவைப் புதுப்பிக்கும்படி கோருவது நியாயமா?

இப்படிக் கேட்கிறார்கள் மயிலிட்டி தென்மேற்கு நூக்கிலைப சனசமூக நிலையத்தினர்.

மீன்பிடிப் படகுகளின் பதிவைப் புதுப்பிக்கும்படி யாழ் மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அதிகாரி கடற்றொழில் பரிசோதகர்கள் மூலமாக மீனவர்களைக் கோரியுள்ளார்.

இதுகுறித்து மேற்படி சனசமூக நிலையத்தினர் காங்கேசன்துறை மேற்கு கடற்றொழில் பரிசோதகர் ஊடாக யாழ் மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அதிகாரிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கோரியுள்ளதாவது,

கடல் கண்காணிப்பு வலயத்தினுல் வருமானம் இழந்து, பட்டினியால் வாடும் எம்பகுதி மீனவர்கள் விசேட உணவு முத்திரையோ அன்றி வறுமை நிவாரண உணவு முத்திரையோ இடைக்கால பல மாதங்களாக கிராமத்தின் விளிம்பில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இத்தகைய நேரத்தில் கரையிலே காய்ந்து, வெடித்து, அழிந்து கொண்டிருக்கும் மீன்பிடிப் படகுகளின் பதிவைப் புதுப்பிக்கும்படி எம்மை வற்புறுத்துவது வேதனையளிக்கும் விடயமாகும்.

இச்செயலை உடன் நிறுத்தி கடல் கண்காணிப்பு வலயம் நீக்கப்படும்வரை பதிவைப் புதுப்பிக்குமாறு வற்புறுத்தக் கூடாது அத்துடன் மீனவர் தமக்குரிய விசேஷ உணவு முத்திரையைப் பெற உதவவேண்டும்.

இப்படி அக்கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. (இ 168)

## கிளிநொச்சி மீண்டும் மின் ஒளி பெறும்

### யாழ் மாநாட்டில் முடிவு

யாழ்ப்பாணம், ஆக 17

அண்மையில் நடைபெற்ற அசம்பாவிதங்களால் மின்விநியோகம் தடைப்பட்டு இருளடைந்திருக்கும் கிளிநொச்சிப் பகுதியில் மீண்டும் ஒளி மயமாகும்.

இப்பகுதி மக்களுக்கு உடன் மின் விநியோகம் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதுசம்பந்தமாக யாழ் செயலகத்தில் ஒரு ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

இதில் யாழ் அரச அதிபர், அனுராதபுரத்திலுள்ள வட பிரதேச மின்சாரசபை முகாமையாளர், கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர், மாங்குளம் மின் பொறியியலாளர், யாழ் பிராந்திய சிரேஷ்ட மின்பொறியியலாளர், கிளிநொச்சி அபிவிருத்திச்சபை உப ஆலோசக அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (இ-5)

## பொலீஸாரும் சேவையில்

யாழ்ப்பாணம், ஆக 17

வவுனியா மாவட்டத்திலுள்ள தடை முகாம்களில் இப்பாய்களுடன் சேர்ந்து பொலீஸாரும் சேவையில் ஈடுபடுகின்றனர். (இ-10)

## நாடாளுமன்றத்துக்கு மேலாக விமானங்கள் பறப்பதற்குத் தடை

கொழும்பு, ஆக. 17

ஸ்ரீ ஜெயவர்த்தனபுரத்தில் உள்ள நாடாளுமன்றக் கட்டடத்துக்கு மேலாக விமானங்கள் பறக்கக்கூடாது.

பாதுகாப்பு அமைச்சு இப்படி உத்தரவிட்டுள்ளது.

நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்தின் வேண்டுகோளின் மீது பாதுகாப்பு அமைச்சு, சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களத்துக்கு இந்த உத்தரவை விடுத்துள்ளது.

பாதுகாப்பு முன் நடவடிக்கையாகவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இரத்மலான விமான நிலையத்தில் இருந்து புறப்படும் விமானங்கள் தற்சமயம் வடகிழக்குத் திசை நோக்கி நாடாளுமன்றக் கட்டடத்துக்கு மேலாகப் பறக்கின்றன.

விமானங்கள் பறக்கப் புதிய பாதை ஒன்றை வகுக்கும் படி சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநர் பணிக்கப்பட்டுள்ளார். (உ-ா)

## சமய அறிவுப் போட்டி இம்முறை இல்லை

நயினாதீவு, ஆக. 17

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்பாள் ஆலய உற்சவத்தையொட்டி நயினாதீவு சனசமூக நிலையத்தினால் கடந்த ஒன்பது ஆண்டுகளாக நடத்தப்பட்டுவந்த சமய அறிவுப்போட்டி இம்முறை நடத்தப்படவில்லை.

அடுத்த ஆண்டு உற்சவத்தையொட்டி 10 ஆவது ஆண்டு பூர்த்தி மிகவும் சிறப்பாக நடத்தப்படுமென நயினாதீவு சனசமூக நிலையச் செயலாளர் திரு க. குலசிங்கம் தெரிவிக்கிறார். உற்சவம் இம்முறை உரிய காலத்தில் நடைபெறாததே சமய அறிவுப் போட்டி நடத்தப்படாததற்குக் காரணம் ஆகும். (இ)

# புறவாழ்வில் விருத்தி; அதுதானா நாகரிகம்?

## அருளுரையில் கேள்வி

யாழ்ப்பாணம், ஆக 17

புறவாழ்வில் அடைந்த விருத்தியைத்தான் நாகரிகம் என்கிறார்கள். ஆனால் அகவாழ்வில் எந்தளவு முன்னேறியிருக்கிறோம் என்பது இன்று கேள்விக்குறியாகவே உள்ளது.

இப்படி ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் நல்லை ஆதீனத்தில் அருளுரை நிகழ்த்துகையில் சொன்னார்.

'வையகம் துயர் தீர வழி' என்ற தலைப்பில் நடந்த இயாழன் அருளுரை நிகழ்த்துகையில் அவர் மேலும் சொன்னதாவது;

உலகத்துயர் தீர எத்தனை மாநாடுகள் சந்திப்புக்கள் இடம் பெற்று விட்டன? ஆனால் அன்று இருந்த உலகம் தான் இன்றும் இருக்கின்றது.

ஆகாயத்தில் பறக்க, கிரகம் விட்டுக் கிரகம் செல்லக் கற்றுக் கொண்ட மனிதன், மனிதனாக வாழ மட்டும் இன்னும் கற்றுக் கொள்ளவில்லை.

புறவாழ்வுக்கான விருத்தியை நாகரிகம் என்று கூறி மனிதன் தன்னைத் தானே அழித்துக் கொள்கிறான்.

மனிதன், மனிதனாக வாழத் தடையாக இருப்பது ஆசை, போட்டி, பொறாமை, பூசல் என்பன இவை நீங்கினால் தான் மனிதனின் அகவாழ்வு நாகரிக வளர்ச்சி பெறும்

பிறரை அழித்து வாழ நினைப்பவன் துரோகி; பிறரைப் பற்றி அக்கறையின்றி வாழ நினைப்பவன் சுயநலவாதி;

பிறரும் வாழத் தானும் வாழ்பவன் தான் மனிதன் பிறர் வாழவே தான் வாழ்பவன் புனிதன் பிறர் வாழ தன்னை இழப்பவன் தெய்வீகன் உண்மை, அன்பு, இறைநினைவு, தருமசிந்தனை, இவைகளை அனுஷ்டித்தால் மனித அகவாழ்வு நாகரிக வளர்ச்சி பெறும்

இப்படி திரு. நா. முத்தையா சொன்னார்.

நேற்று முன்தினம் (வெள்ளி) 'பச்சைக்கூடு கைலாசம்' என்ற தலைப்பில் ஆத்மஜோதி முத்தையா அவர்கள் அருளுரை நிகழ்த்தினார். (உ - எ)

## வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் உதயம்

யாழ்ப்பாணம் ஆக 17

வடமாகாணத்தின் வேலையற்ற பட்டதாரிகள் பலர் ஒன்று சேர்ந்து வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் ஒன்றை உருவாக்கியுள்ளனர்.

இச்சங்கத்தலைவராக திரு வி. எ. சிவராசாவும் செயலாளராக திரு கே. ரஞ்சித்தும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்திய இலங்கை பல்கலைக்கழகங்களில் பட்டம்பெற்ற பலர் இச்சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்ந்துள்ளனர்.

அரச பட்டதாரி ஆசிரிய நியமனம் குறித்து கல்வித் திணைக்களம், கல்வி அமைச்சு ஆகியவற்றுடன் தொடர்பு கொள்ள விருப்பதாக சங்கப் பிரமுகர்கள் தெரிவித்தனர். (உ - 5)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

பனம் பொருள் அபிவிருத்திச் சபையின்
அனுசரணையுடன்
யாழ் பீச் இன்ஸ்
ஆதரவில்
ஜோ. எகட்டன்
வழங்கும்
பனம் பொருள் உணவு
அறிமுகப்படுத்துவிழா

பனை உணவுப் பொருட்களின் அறிமுக விழாவில் கலந்து கொண்டு எமது பாரம்பரிய உள்ளூர் உற்பத்திகளைக் கொண்டு தயாரிக்கும் உணவு வகைகளை கண்டு மகிழுங்கள்.

யாழ் பீச் இன்னில்
07 - 09 - 1986 அன்று
காலை 10 30 மணி முதல் உங்களை
வரவேற்கக் காத்திருக்கின்றோம்!
பிரவேசம் முற்றிலும் இலவசம்!
மறந்துவிடாதீர்கள்!
07-09-1986 காலை 10 30 மணியளவில்
பனம் பொருள் உணவு
அறிமுகப்படுத்தும் அறிமுக விழா
'செனித்' புதுமையின் உறைவிடம்

* உங்கள் மனதைவிட்டு அகலாத எந்த வைபவங்களையும் அதிசிறந்த நவீன கருவிகளால் விடியோ படம் உயர்ந்த முறையில் பிடித்துக் கொள்வதற்கும்—

* வடபகுதியில் தரமான திறமான சிறந்த கலர் படப் பிடிப்புகளுக்கும்—

* பழைய புதிய பாடல்களை நெஞ்சைத் தொடும் வகையில் ஒலிப்பதிவு செய்து கொள்வதற்கும்—

என்றும் நாடவேண்டிய
ஒப்பற்ற இடம்
ஜெயபாலனின்
ராஜா
வீடியோ நிலையம்
துர்க்காபுரம், தெல்லிப்பழை.

## காணமற்போன மீன்தூள் ஆலைக் காவலர்கள் மர்மம் நீடிக்கிறது

### கடற்றொழிலாளர் சமாசம் தீவிரமுயற்சி

யாழ்ப்பாணம், ஆக 17

கடந்த மாதம் 23 ஆம் திகதி மண்டைதீவு மீன்தூள் ஆலையில் கடமையில் இருந்தபோது மர்மமான முறையில் காணமற்போன பாதுகாவலர்களான இராமலிங்கம் வயது (65) லட்சுமிகுமார் வயது (35) ஆகியோர் இன்னும் கண்டு பிடிக்கப்படாத நிலையில் மர்மம் நீடித்துக்கொண்டிருக்கிறது

இவர்கள் 'மெற்றோ பொலிஸ் செக்கியூரிட்டி சேவிஸ்' என்னும் பாதுகாப்பு சேவை ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள்

இவர்களது மறைவு இவர்களது மனைவி, பிள்ளைகளுக்கு மாத்திரமல்லாது மண்டைதீவு பொதுமக்களையும், வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜ ஊழியர்கள், நிர்வாகிகளையும் பெரிதும் கலக்கமடையச் செய்துள்ளது.

இவர்கள் காணமற்போனபோது பாதுகாப்பறையிலிருந்த பச்சை நிற 5 கலன் நீர் பவுசர், லட்சுமிகுமாரின் துவிச்சக்கரவண்டியும் காணமற்போனது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் எப்படி மறைந்தார்கள்? எவரால் கடத்தப்பட்டார்கள்? எதற்காகக் கடத்தப்பட்டார்கள்? என்பவற்றுக்கான காரணம் எதுவும் புரியாத புதிராக உள்ளது.

இவர்களைக் கண்டு பிடிப்பதற்கு, வடமாகாணக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தொடர்ந்து தீவிர முயற்சி எடுத்து வருகிறது (இ)

## பரீட்சை எழுதும் மாணவர் நலன் கருதி நூல்நிலைய வசதி

வட்டுக்கோட்டை, ஆக 17

வட்டுக்கோட்டை சிவன்கோவிலடி கலைவாணி கல்வி நிலையத்தினர் பரீட்சையை நோக்கமாகக் கொண்ட மாணவர்களது நலன் கருதி புதிய பயிற்சிப் புத்தகங்கள் அடங்கிய நூல் நிலையத்தை நிறுவியுள்ளனர்.

பரீட்சையை நோக்கமாகக் கொண்ட மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்த இந்த நூல்நிலையத்தைத் திறந்து வைப்பதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைவதோடு சிந்தித்து செயலாற்றிய கலைவாணி கல்வி நிலைய இயக்குநர்களையும் நான் பெரிதும் பாராட்டுகின்றேன்.

வட்டுக்கோட்டை சிவன் கோவிலடி கலைவாணி கல்வி நிலையத்தினரால் அமைக்கப்பட்ட நூல் நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முன்னாள் தலைவரும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி ஆசிரியருமான திரு. வ. யோகானந்தசிவம் மேற்கண்டவாறு கூறினார்.

கலைவாணி கல்வி நிலைய மாணவர் ஒன்றியத் தலைவர் திரு. பா. யோகசரன் தலைமையில் இத்திறப்பு விழா நடைபெற்றது.

திருமதி. கோணேஸ்வரநாதன் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

மூளாய் ரெமிங்ரன் கல்வி நிலைய இயக்குநர் திரு கே. யோகேஸ்வரன், மாயன் தொழிலக இயக்குநர் திரு. ந. கடம்பேஸ்வரன், ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் திரு. செ. பாராஜசிங்கம், டாக்டர் நா. கணேசலிங்கநாதன், சங்கானை அரசினர் வைத்தியசாலை மருந்தாளர் திரு. ம. வ. சதானந்தசிவம், கலைவாணி கல்வி நிலைய இயக்குநர்கள் திரு. ஐ. தேவானந்தன், திரு பொ ரவிமாஸ்டர் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் உரை நிகழ்த்தினர்.

## கைது

கொழும்பு, ஆக 14

அரசுக்கு எதிரான சுலோகங்களை சுவரில் எழுதிக் கொண்டிருந்த சமயம் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படும் தெஹிவளை மாநகரசபையின் மூன்று பிரபல சுதந்திரக் கட்சி உறுப்பினர்களை பொலீஸார் கடந்த ஞாயிறு கைது செய்...

## 10ஆவது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஆக. 17

தென்புலோலி கப்பன் கழக சனசமூக நிலையத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப் போட்டியும் இன்று ஞாயிறு பிற்பகல் நடைபெறும்.

பருத்தித்துறை மத்திய பிரசைகள் குழுத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். திருமதி என் கணேசலிங்கம் பரிசுகளை வழங்குவார்.

நிலையத் தலைவர் திரு எம். மகேந்திரன் தலைமை வகிப்பார். (உ-எ)

## சிறப்பு மலர்

கரவெட்டி, ஆக. 17

கரவெட்டி கிழக்கு வளர்மதி சுகாதார நிலையத்தின் முதலாவது ஆண்டு நிறைவை ஒட்டி, இன்று 15 ஆம் திகதி வளர்மதி சுகாதார நிலையத்தினால் சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்படும்.

REGISTRATION OF CONTRACTORS FOR THE MAINTENANCE OF ELECTRICAL / ELECTRONIC APPLIANCES AND AIR-CONDITIONERS AND COOLERS.

Applications are invited from recognised Firms and qualified individuals for Registration as Contractors for the maintenance of Electrical / Electronic appliances, Air-conditioners and Coolers etc., at this Teaching Hospital.

Applications should be accompanied with details of staff with their qualifications and experience and also with the details of work done in this field up to now.

Applications should be sent by Registered post addressed to the Director, Teaching Hospital, Jaffna to reach him on or before 31st August 1986.

C. S. NACHINARKINIAN
Director.

General Hospital (Teaching),
Jaffna.
14-8-1986.

கிறீன்பீல்ட் ரவல்ஸ் ஒப்பறேட்டர்ஸ்
Greenfield Travel Operators
யாழ்நகரில்
மீண்டும் எமது சேவை

வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகள் மட்டுமல்ல
வெளிநாட்டிலிருந்து உங்களுக்கு வரும்
தொலைபேசி அழைப்புக்களையும் கூட
நீங்கள் உடன் பெற்றுக் கொள்ளலாம்

அதற்கு வசதியாக காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை கொழும்பு — யாழ்ப்பாணம் நேரடித் தொலைத் தொடர்பு எந்நேரமும் தயாராக இருக்கிறது.

வெளிநாட்டில் இருக்கும் உங்கள் உறவினர்கள் கொழும்பு தொலைபேசி இலக்கம் 573594 ஊடாக எமது யாழ்ப்பாண தொலைபேசி இல. 23875 அல்லது 22784 உடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம்.

இதேபோல எமது கொழும்பு ரெலக்ஸ் (Telex) இல. 22287 மூலம் எமது யாழ்நகர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

இது தவிர,
* பாஸ்போட் — புதிதாகப்பெற — புதுப்பிக்க
* விஸா — சர்வதேச சாரதி லைசென்ஸ்
* விமான டிக்கெட்டுக்கள் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள

Greenfield Travel Operators
No: 26, Model Market (upstairs), JAFFNA
Telephone; 23875 & 22784 Telex No: 22287

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

உடோசை ஒருவன் கல்வியைப் பாதுகாத்துக் கொண்டே இருப்பதாக எப்போதும் எண்ணிக் கொண்டிரு.

— அன்னை சாரதாதேவி

உதயன்

உண்மை - விசுவாசம் - நடுநிலைமை

இல. 15 2வது ஒழுங்கை தொலைபேசி 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம், 17-08-86 த பெ 23

# திருட்டு, திருட்டு எங்கும் திருட்டு!

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இப்போது மிகவும் மலிந்துள்ள தொல்லைகளில் முக்கியமான ஒன்று திருட்டு மாவட்டத்தின் கிராமத்துக்குக் கிராமம், குறிச்சிக்குக் குறிச்சி, ஒழுங்கைக்கு ஒழுங்கை நாளாந்தம் திருட்டுகள் நடந்து வருகின்றன.

வசதியுள்ளவர், வசதி இல்லாதவர் என்ற பேதமின்றி எல்லோரது வீடுகளிலும், மற்றும் வர்த்தக ஸ்தாபனங்களிலும் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டுகிறார்கள்.

ஆண் துணையின்றி பெண்கள் தனித்திருக்கும் வீடுகளுக்கும் சென்று அவர்களின் நகைகளையும், பணத்தையும் திருடிச் செல்கிறார்கள்.

ஆக வசதி குறைந்தவர்கள் பல நாட்கள் பல நேரச் சாப்பாட்டைத் தவிர்த்தாவது தமது பெண் பிள்ளைகளுக்கு ஆசையோடு ஒரு சங்கிலியை அல்லது காதணியைச் செய்து கொடுப்பது உண்டு.

அது இன்று நேற்று வந்த வழக்கமன்று தமிழ் மக்கள் மத்தியில் காலங்காலமாக இருந்து வரும் வழக்கம் பணக்காரர்கள் மட்டுந்தான் ஆபரணங்கள் அணிவது என்பதில்லை மிகக் கஷ்டமான குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் தமது ஏனைய தேவைகளைக் குறைத்து நகை அணிகிறார்கள். அவ்வாறு வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் நகைகளும் திருடப்படுகின்றன.

ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசத்தைத் திருடன் ஆராய்வதில்லை; அவனுக்குத் தேவை பிறர் பொருள். அதனைச் சுலபமாகப் பெறுவதற்கு வழி திருட்டு

சிறிய அளவிலான திருட்டாயினும் சரி, பெரிய அளவிலான திருட்டாயினும் சரி இப்போது திருடர்கள் துப்பாக்கிகளுடன் தான் வருகிறார்கள்.

அவர்கள் கொண்டு வருவது உண்மையான துப்பாக்கிகள் தானா அல்லது போலித் துப்பாக்கிகளா என்று பரீட்சிக்க வீட்டாருக்கு ஏது துணிவு? அவகாசம் தான் ஏது?

இத்தகைய ஒரு பின்னணியில் திருடர்களுக்கு எங்கிருந்து துப்பாக்கி கிடைக்கிறது என்பது ஆராயப்பட வேண்டிய விடயம்; கண்டறியப்பட வேண்டிய விடயம் என்று திருட்டுகளால் பாதிக்கப்பட்ட மக்கள் கூறுகிறார்கள்.

இவ்விடயத்தில் புனித இயக்கங்களுக்கு பெரும் பொறுப்பு உண்டு.

பொலிஸ் நிர்வாகம் அறவே குடாநாட்டில் இல்லை. அத்தோடு துப்பாக்கிகளும் இயக்கங்களிடமே, தாராளமாக உண்டு.

இயக்கங்களை விட்டு விலகுவோர் தம்முடன் துப்பாக்கிகளை எடுத்துச் சென்று இப்படியாக திருட்டுகளில் ஈடுபடுகிறார்களா? அல்லது

புனித இயக்கங்கள் குறித்து மக்கள் மனதில் தப்பபிப்பிராயத்தையும், சந்தேகத்தையும் ஏற்படுத்தும் நோக்குடன் வெளியார்— தீய சக்திகள் இத்திருட்டுகளைச் செய்கின்றனவா? அல்லது.

திருடர்கள் எல்லோரும் போலித் துப்பாக்கிகளைக் காட்டி மக்களை அச்சுறுத்தி திருட்டுக்களைச் செய்கிறார்களா?

இந்த மூன்று கேள்விகளுக்கும் பதில் காண வேண்டிய கடமை புனித இயக்கங்களுக்கே உண்டு; பதில் காணக்கூடிய வல்லமையையும் அவற்றிடமே உண்டு.

கண்காணிப்புக் குழுக்கள், விழிப்பு மன்றங்கள் எவையாக இருந்தாலும் அவற்றால் மேற்சொன்ன மூன்று வினாக்களுக்கும் பதில் கண்டு பிடிக்க இயலாது. காரணம் அவை ஆயுதபாணிகளல்ல. ஆயுதத்தோடு வரும் திருடர்களின் தாற்பரியத்தைக் கண்டுபிடிக்க அவர்களுக்கு வலுவில்லை.

ஆகையால் உண்மையான திருடர்கள் யார்? அவர்கள் கொண்டு வரும் துப்பாக்கிகள் போலிகளற்றவையா? எங்கிருந்து துப்பாக்கிகளைப் பெறுகிறார்கள்? என்பனவற்றுக்கான பதில்களை புனித இயக்கங்களே கண்டு பிடித்து அம்பலப்படுத்த வேண்டும்.

சமூக விரோதிகளான திருடர்களை சமூகத்துக்கு இனங்காட்டிக் கொடுக்க வேண்டும்.

அப்போது தான் திருட்டுகள் குறைய ஏதுவாகும். ஏனைய பல தொல்லைகளுக்கு மத்தியில், ஆபத்துகளுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் எமது மக்கள் திருட்டுத் தொல்லையில் இருந்து விடுபட முடியும்

## சனசமூக நிலையங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு முன்னின்றுழைக்க வேண்டும்

வேலணை, ஆக. 17

சனசமூக நிலையங்கள் நாட்டினது வளர்ச்சிக்கும், பொருளாதார விருத்திக்கும் முன்னின்று உழைக்கவேண்டும்.

மேற்கண்டவாறு தெரிவித்தார் வேலணை சனசமூகநிலைய சமாஜத்தின் தலைவர் திரு. த மகாலிங்கம்.

வேலணை சனசமூக நிலைய சமாசக் கூட்டம் யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபை உப அலுவலக நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

தலைவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் கிராமத்தின் வளர்ச்சியில் சனசமூகநிலையங்கள் பெரும் பங்காற்றுகின்றன என்றார்.

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் வேலணை உபஅலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. சி சிவராசா சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ஆ ரகுநாதன் ஆகியோரும் உரையாற்றினர். (இ)

பிரதிநிதிகள்சபை அங்கீகாரம்

வாஷிங்டன், ஆக 16

அமெரிக்க ஜனாதிபதி றேகனின் பாதுகாப்புத் திட்டங்களைக் கட்டுப்படுத்தும் மசோதாவை அமெரிக்க பிரதிநிதிகள் சபை அங்கீகரித்துள்ளது.

1987ஆம் ஆண்டிற்கான பாதுகாப்பு மசோதா இதுவாகும்.

செய்மதிகளுக்கு எதிரான ஆயுதங்களின் பரிசோதனைகளை ஓராண்டிற்கு தடுப்பதோடு வேறு முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாப்பு முன்முயற்சிகளுக்கான செலவு செய்வதையும் இந்த மசோதா குறைக்கும். (உ-ஓ)

# ஆந்திரப் பிரதேசத்தில் வெள்ளம்; 42 பேர் பலி!

ஆந்திரப் பிரதேசத்தில் பெருமழையால் ஏற்பட்ட வெள்ளத்தினால் 42 பேர் உயிரிழந்தனர் நான்கு கிராமங்கள் வெள்ளத்தால் சூழப்பட்ட நிலையில் முற்றாகத் துண்டிக்கப்பட்டிருக்கின்றன. ஆயிரக்கணக்கில் கால்நடைகள் நீரில் மூழ்கி உயிரிழந்தன

புதுடில்லி, ஆகஸ்ட் 16

வெள்ளத்தினால்பாதிக்கப்பட்ட 12 மாவட்டங்களில் முப்படையினர் மீட்புப்பணியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

மிகமோசமாய் பாதிக்கப்பட்ட கிழக்கு, மேற்கு கோதாவரி, கிருஷ்ணா, கர்னூர், வாரங்கல் மாவட்டங்களின் பல பகுதிகளிலிருந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மக்கள்வேறு இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டிருக்கிறார்கள்.

வெள்ளத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடுமென அறிவிக்கப்படுகிறது (ட)

## பாகிஸ்தானில் தொடர்ந்து மோதல்
### ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆவேசம்

இஸ்லாமாபாத், ஆக. 16

பாகிஸ்தானின் எதிர்க்கட்சி ஆதரவாளர்களுக்கும் பொலீஸாருக்கும் இடையில் நேற்றும் பலத்த மோதல்கள் நிகழ்ந்தன.

கராச்சி உட்பட சிந்து மாகாணத்தின் பல பகுதிகளிலும் பரவலாக இந்த மோதல் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது

எதிர்க்கட்சித் தலைவி பெனாஸிர் பூட்டோ கைது செய்யப்பட்டதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தவர்களை பொலீஸார் கலைக்க முற்பட்ட போது ஆர்ப்பாட்டக்காரர்கள் பல உடைமைகளை தீவைத்துக் கொளுத்தினார்கள்.

சிறைச்சாலை ஒன்று முற்றுகையிடப்பட்டு உடைக்கப்பட்டது. 24 சிறைக்கைதிகளும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தப்பவைத்தனர்.

பெனாஸிர் பூட்டோவின் பிறந்த இடத்திலும் பல நூற்றுக் கணக்கான வர்களைப் பொலீஸார் கைது செய்தனர். (உ-ஓ)

### பெனாஸிர் பூட்டோ கருத்து

இஸ்லாமாபாத், ஆக 16

பாகிஸ்தானில் மக்களின் எதிர்ப்புப் பெருகி வருவதால் ஷியாசின் அரசு நிலைகுலைந்து வருகின்றது.

—இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவி செல்வி பெனாஸிர் பூட்டோ தெரிவித்துள்ளார்

கடந்த வியாழக்கிழமை கராச்சியில் கைதுசெய்யப்படுவதற்குமுன்னதாக தொலைக்காட்சிக்காக அவரது பேட்டி ஒன்று பதிவுசெய்யப்பட்டது. (ஓ)

### அமெரிக்கா குறை கூறுகிறது

இஸ்லாமாபாத், ஆக. 16

பாகிஸ்தானில் எதிர்க்கட்சியினருக்கு எதிராக எடுக்கப்பட்ட பொலிஸ் நடவடிக்கைகளை அமெரிக்கா குறைகூறியுள்ளது.

பெனாஸிர் பூட்டோ உட்பட பல எதிர்க்கட்சித் தலைவர்கள் கைது செய்யப்பட்டிருப்பது பற்றி அமெரிக்க நிர்வாகம் வருத்தம் தெரிவித்துள்ளது.

மேற்கு ஜேர்மனியும் பாகிஸ்தானின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பையும் வன்மையான கண்டனத்தையும் தெரிவித்துள்ளது. (உ-ஓ)

## நோக்கங்களை இனங்காண குழு
### சார்க் கூட்டத்தில் முடிவு

அரசியல் நோக்கங்கள் எவை? பயங்கரவாத நோக்கங்கள் எவை என்பதை அடையாளங்கண்டு நடவடிக்கை எடுப்பது பற்றி ஆராய ஒரு குழுவை நியமிப்பதென்று டாக்காவில் முடிவடைந்த "சார்க்" விதாபனத்தின் வெளிநாட்டமைச்சர்கள் மட்டக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை எடுப்பது பற்றிய விவாதத்தின்போது இலங்கைத் தமிழ்ப் போராளிகளின் நடவடிக்கைகளை பயங்கரவாதத்துடன் ஒப்பிட இலங்கை எடுத்த முயற்சியை இந்தியா வன்மையாக எதிர்த்தது. அதைத்தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டது.

வெளி உலகில்

## தென்னாபிரிக்கா மீது பொருளாதாரத் தடை
### அமெரிக்க 'செனட்' தீர்மானம்

வாஷிங்டன், ஆக 17

தென் ஆபிரிக்கா மீது பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா விதிக்க வேண்டும்.

இவ்வாறான தீர்மானமொன்றை இரண்டு நாள் விவாதத்தின் பின்னர் அமெரிக்க செனட்' சபை நிறைவேற்றியது.

இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக 84வாக்குகளும் எதிராக 14 வாக்குகளும் கிடைத்தன.

தென்னாபிரிக்காவுடன் புதிய ஒப்பந்தங்களெவற்றையும் அமெரிக்கா செய்துகொள்ளக்கூடாது எனவும்—

எரிபொருள்கள், இரும்பு, துணிவகைகள், விவசாயப்பொருள்கள் ஆகியவற்றை தென்னாபிரிக்காவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்கவேண்டுமெனவும்- தீர்மானத்தில் கூறப்பட்டிருக்கிறது.

அத்துடன் தென் ஆபிரிக்க விமானங்கள் அமெரிக்காவில் தரையிறங்குவதற்கு வழங்கப்பட்டிருந்த அனுமதியையும் அமெரிக்கா ரத்துச் செய்யவேண்டும் எனவும் செனட்சபை கோரியிருக்கிறது

செனட்சபையின் இத்தீர்மானம் ஜனாதிபதி றேகனின் அங்கீகாரத்தை பெற்றால் மட்டுமே சட்டமாக வாய்ப்பு ஏற்படும், (உ-ஓ)

### மிஸோராமில் புதிய அமைச்சரவை

புதுடில்லி, ஆக. 16

மிஸோராமில் புதிய அமைச்சரவை வரும் வியாழக்கிழமை பதவி ஏற்கும்.

இந்திரா காங்கிரஸ், மிஸோ தேசிய முன்னணிக்கூட்டணி அமைப்பாக இது இயங்கும்.

இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் ஐவரும் மிஸோ தேசிய முன்னணி உறுப்பினர்கள் நால்வரும் அமைச்சரவையில் இடம்பெறுவர்.

இந்த அமைச்சரவைக்கு மிஸோ தேசிய முன்னணித் தலைவர் திரு லால் டிங்கோ தலைமை தாங்குவாரென ஏகமனதாக முடிவு செய்யப்பட்டுள்ளது (உ-ஓ)

### மீனினால் வந்த சிக்கல்

கடந்தவியாழன் இரவு எலிஸபெத் மகாராணியாரின் தாயார் அவசரமாக ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். மீன் சாப்பிட்டதால் ஏற்பட்ட அஜீரணக் கோளாறு காரணமாகவே அவர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பட்டார். (ஓ)

# தமிழ் அகதிகள் குறித்து மேற்கு நாட்டவர் கருத்து

அவர்களின் பயணத்திட்டம் ஆரம்ப விவாதங்களுக்கு வித்திட்டது.

ஐரோப்பாவுக்கு ஆயிரக் கணக்கான இலங்கைத் தமிழ் இளைஞர்கள் வந்து சேரும் நிலை தடுக்கப்பட வேண்டும் இதுதான் நிலை

ஏன் அவர்கள் வருகிறார்கள்? இது பற்றிக் கேட்பதில் ஒருவருக்கும் அக்கறை இல்லை

ஐம்பதினாயிரம் தமிழர்களின் பெரும்பாலானோர் கிழக்கு ஜேர்மனி ஊடாகவே வருகிறார்கள். இதன் பின்னால் சதி ஒன்று இருப்பதாக மேற்கு ஐரோப்பியர்கள் கருதுகிறார்கள்.

இலங்கையில் இருந்து மேற்கு ஐரோப்பாவுக்கு பொருளாதார ரீதியில் இடம்பெயர்வோரை கிழக்கு ஐரோப்பிய நாடுகள் தான் ஊக்கப்படுத்துகின்றன என்று மேற்கு ஐரோப்பியர்கள் எண்ணுகின்றனர்.

"பொருளாதார ரீதியில் இடம்பெயர்ந்தோர்—" இந்த எண்ணம் வலுப்பெற்றுவிட்டது.

ஐரோப்பிய கண்டத்தை கேள்விக்குறி திண்டாட்டம் ஆட்டிப் படைக்கின்றது. பிரான்ஸ், ஜெர்மன், பிரிட்டன், ஸ்காண்டிநேவியா, சுவிட்ஸர்லாந்து, நெதர்லாந்து நாடுகளில் வாழ்பவர்கள் தங்கள் நாட்டுக்கு வந்துள்ள—கறுப்பு நிற இடைத்திரவாளர்— இவர்களை உத்தியோகம் தேடியே வந்துள்ளவர்கள் என்று முடிவு கட்டி விட்டனர்.

சித்திரவதை, மரணம், அடக்குமுறை என்பன எல்லாம் வெறும் கதைகளே. இது இவர்கள் முடிவு

போலந்து, செக்கோஸ்லோவாகியா ஆகிய நாடுகளில் தான் இக்கதைகளை நம்பினர்.

வெளியே தெரியாத எதிரியிடமிருந்து தப்பி ஓடி ஐரோப்பாவில் தஞ்சம் கோருகின்றனர், தமிழர்கள்.

"இத்தமிழர்கள் யூனிச விரோதிகளாகவும் நிறமானவர்களாகவும் இருப்பின் வரவேற்கப்படுகிறார்கள்"— இப்படி மனித உரிமை இயக்கவாதி ஒருவர் சொன்னார்.

தமிழர்கள் இந்த இரண்டிற்கும் அடங்கவில்லை. அகதிகளாகத் தமிழர்கள் வரத் தொடங்கி 3 ஆண்டுகளாகிவிட்டன. அவர்களின் பிரச்சினை பற்றி அரை குறையாகத்தான் ஐரோப்பிய நாடுகளில் தெரிந்து இருக்கிறது.

"அவர்களை வேண்டாம் என்று முதலிலேயே மக்கள் கூறுகின்றனர். ஏன் என்றால் அவர்கள் தேவையற்றவர்கள். அவர்கள் என்ன சொல்ல விரும்புகிறார்கள் என்பது பற்றியும் ஐரோப்பியர்கள் அறிய விரும்புகிறார்கள் இல்லை" இப்படிச் சொல்கிறார் அகதிகளுக்கு உதவும் சுவிஸ் நிலையப் பிரமுகர் வால்டர் ஸ்டொக்ஹலி.

தமிழர்களின் வருகையை வேலையில்லாது அவதிப்படும் ஐரோப்பியர்களும் ... தொழிற்சங்கவாதிகள் வலதுசாரி அரசியல்வாதிகள் கருதுகின்றனர்

"இது பற்றிய உணர்வு தீவிரமாக இருக்கும் சமயம்தான் தமிழர்கள் வந்தனர். பொதுசன அபிப்பிராயம் மிகவும் அவசியம் இதனால் தமிழரை வரவேற்கக் கூடியதாக அரசியல் வாதிகள் இருக்க முடியாது போயிற்று

இத்தோ— சிலியில் இருந்து வந்த ஆயிரக்கணக்கான அகதிகளை ஐரோப்பியர்கள் பலமாக வரவேற்றனர்.

காரணம் அகதிகளாக வந்தவர்களில் பெரும்பாலோர் சிறுகுழந்தைகள்

இதற்கு முரணாக அகதிகளாக வந்த தமிழர்கள் இளைஞர்கள் வேலை செய்வதில் தயாரானவர்கள். (தொடரும்) (உ-ஈ)

அத்திலாந்திக் கடலில் கடந்த வாரம் 'படகு அகதிகளாக' இலங்கைத் தமிழர்கள் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கைத் தமிழ் அகதிகள் பற்றி மீண்டும் உலகெங்கும் பேசப்படுகின்றது.

இந்த நிலையில் 'புரொன்ட் லைன்' இந்திய ஆங்கில சஞ்சிகை தனது ஆகஸ்ட் 9, 22 ஆம் திகதி இதழில் 'தேவையற்ற ஒரு கூட்டம்' என்ற தலைப்பில் ஐரோப்பாவில் உள்ள தமிழ் அகதிகள் பற்றி கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஜெனிவாவில் இருந்து சித்ரா சுப்பிரமணியம் இக்கட்டுரையை எழுதியிருக்கிறார்.

முதல் பகுதி இன்று பிரசுரமாகின்றது.

சமய சந்திகளில்

### ஸ்தூபி அபிஷேகம்

யாழ்ப்பாணம், ஆக.17

யாழ். வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய வசந்தமண்டப புதிய விமானத்திற்கு ஸ்தூபி அபிஷேகம் நாளை காலை 10 மணிக்கு ஆரம்பமாகும். (உ-ஓ)


### ராமாவில் கந்தன் உற்சவங்கள்

யாழ்ப்பாணம், ஆக 17

மீசாலைவடக்குஸ்ரீராமாவில் கந்தனின் அலங்கார உற்சவங்கள் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகின.

வரும் சனிக்கிழமை 23 ஆம் திகதி சங்காபிஷேகத்துடன் உற்சவம் பூர்த்தியடையும்.

ஆத்மஜோதி திரு. நா முத்தையா அவர்கள் தினமும் காலை 11.00 மணிக்கு இந்த சமயத்தின் பல்வேறு தத்துவங்களை விளக்கி சொற்பொழிவாற்றுவார்கள். (உ-ஓ)



செய்யாமொழி

குறள்:

உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க் கொன்று
ஈவார் மேல் நிற்கும் புகழ்.

பொருள்:

புகழ்ந்து சொல்கின்றவர் சொல்பவை எல்லாம் வறுமையால் இரப்பவர்க்கு ஒரு பொருள் கொடுத்து உதவுகின்றவர்மேல் நிற்கின்ற புகழேயாகும்.

# கிறிஸ்துவைப் பற்றிய மேன்மையான சாட்சி

கிறிஸ்து தம்மைக் குறித்த மேன்மையான சாட்சி பற்றி பின்வருமாறு கூறுகிறார்:-

நான் என் சுயமாய் ஒன்றும் செய்வதில்லை, நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன். எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது

என்னைக் குறித்து நானே சாட்சி கொடுத்தால் என் சாட்சி மெய்யாயிராது. என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவர் வேறொருவர் இருக்கிறார், அவர் என்னைக் குறித்துக் கொடுக்கிற சாட்சி மெய்யான சாட்சியென்று அறிந்திருக்கிறேன்

நீங்கள் யோவானிடத்தில் ஆளனுப்பி விசாரித்தீர்கள், அவன் சத்தியத்திற்குச் சாட்சி கொடுத்தான் நான் ஏற்றுக்கொள்ளுகிற சாட்சி மனுஷருடைய சாட்சியல்ல, நீங்கள் இரட்சிக்கப்படுவதற்காகவே இவைகளைச் சொல்லுகிறேன். அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான்; நீங்களும் சிலகாலம் அவன் வெளிச்சத்திலே களிகூர மனதாயிருந்தீர்கள்.

ஞானக்கதிர்

யோவானுடைய சாட்சியைப் பார்க்கிலும் மேன்மையான சாட்சி எனக்கு உண்டு. நான் நிறைவேற்றும்படிக்குப் பிதாவானவர் எனக்குக் கற்பித்ததும் நான் செய்துவருகிறதுமான கிரியைகளே பிதா என்னை அனுப்பினார் என்று என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறது;

என்னை அனுப்பிய பிதா தாமே என்னைக் குறித்துச் சாட்சி கொடுத்திருக்கிறார்; நீங்கள் ஒருகாலும் அவர் சத்தத்தைக் கேட்டதுமில்லை, அவர் ரூபத்தைக் கண்டதுமில்லை. அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசியாதபடியால் அவருடைய வசனம் உங்களில் நிலைத்திருக்கிறதுமில்லை.



வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்

(4ஆம் பக்கம் பார்க்க)

நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

### நசுங்கியுளம் நலிகின்ற நிலை நீக்கு

அசுரர்களோர் அமரர்க்கு அழிவைச் செய்ய
ஆட்களவர்க்கு அபயமதை அளித்து என்றும்
பசுமைமிகு தமிழினையே கேட்க ஔவைப்
பாட்டிக்குச் சுட்ட பழம் தந்த தேவா
விசும்பினையும் எட்டிநின்ற புகழ்ப்பெற்ற
வாழ்வதனை அமைத்திட்ட மக்கள் இன்று
நசுங்கியுளம் நலிகின்ற நிலையை நீக்கி
நன்மைதொரு தீர்வினைநீ காட்ட வாராய்!

—நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Computer Programming**
6 Months — Weekends
BASIC LANGUAGE
CLASSES HAVE JUST COMMENCED
**Cantabia Institute**
21, Main Street, Jaffna.
T Phone: 24201

# உதயன்

17-08-1986 ஞாயிற்றுக்கிழமை

SPOKEN ENGLISH
Full Course Fees Rs. 100/- Only
TOEFL
Full Course Fees Rs. 250/-
Lecturer: MR. KANDIAH NAVERENDRAN
Week-end Classes have just commenced
**Cantabia Institute**
21, Main Street, Jaffna.
T'Phone 24201

## வித்தாரம்

என்ன முரளி, இன்டைக்கு பேப்பரும் கையுமாவே வாறாய்! முக்கியமா ஏதாவது கண்டிட்டியோ?

அட நாங்கள் செய்தி போட்டு அதுக்கு விளக்கமும் சொல்ல வேணும் என்டு நீ எதிர்பாக்கிறாய். எங்களுக்குக் கிடைக்கிற தகவல்களை வைச்சுத் தான் நாங்கள் செய்தியளை எழுதிறது. சில தை விளக்கமாய் எழுதலாம். சிலதை விளக்கமாய் எழுத முடியாது. சிலதை விளக்கமாய் எழுதக் கூடாது.

உந்த 'ரெக்னிக்கல்' பிரச்சினைகளை எல்லாம் உனக்குச் சொல்லி என்ன விளங்கப் போகுது . . . ! நீ கேட்ட விஷயத்துக்கு நான் நேராய் வாறனே..

அணிசேரா நாடுகளின் வருடாந்த மாநாடு செப்டம்பர் முதல் வாரத்தில் சிம்பாப்வே நாட்டில், அதன் தலைநகரான ஹராரேயில நடக்கப் போகுது. அந்த மாநாட்டுக்கு இலங்கை நாட்டு அதிபர் போகமாட்டாராம். அது வார்ஜிதமாகிவிட்டுது.

அவர் ஹராரேக்குப் போகாமல் இருப்பதற்கு காரணம் ஒண்டு சொல்லப்பட்டிருக்கு அதாவது இனப் பிரச்சினைத் தீர்வில் இருக்கிற அக்கறை காலை தான் அவர் போகயில்லை; பதிலுக்குப் பிரதமர் போவார் என்டு அறிவிச்சிருக்கு.

இனப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் பெரிய அக்கறையாய் இருக்கிறோம் என்டதை உலகத்துக்குக் காட்ட ஒரு நல்ல சந்தர்ப்பம் உதுஎண்டு நினைச்சிருக்கக் கூடும்.

ஆனால் உண்மையான இரண்டு உட்காரணங்கள் இருப்பதாக கொழும்பில அரசியல் வட்டாரங்களில கிசுகிசுக்கினம்.

கொஞ்சம் பொறடா அப்பா. கிசுகிசு என்ட உடனே காதை அகலவிக்கிறாய்!

அதி உத்தமருக்கு இப்ப வெளிநாடு போகப் பயம். மாகாணசபை யோசனையில தென்னிலங்கையில அவருக்குப் பலத்த எதிர்ப்புக் கிளம்பி இருக்கு. சிறிமா கட்சி எப்ப அரசாங்கத்தை கவிழ்த்தலாம் என்டு எதிர்பார்த்துக்கொண்டு இருக்கு.

அந்தக் கட்சிக்கு ஆதரவான ஆக்களும் இராமண்ணா பாட்டியில இருக்கினம் தானே இப்ப வெளியால போகச் சிலவேளை, அந்த இராமண்ணா "லலித்" சேர்ந்து ஒரு "கூ"ப்பாட்டி வைச்சிட்டாலும் என்ட பயம் ஒண்டு இருக்காம். அதுதானும் ஹராரே பயணத்தை ரத்துச் செய்ததுக்கு மூலக் காரணம் என்டு பெரிசா கதைபடுகுதப்பா

இனப் பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை, அரசியல் நடவடிக்கை என்ட விஷயங்களில இராமண்ணா 'பாட்டி' பெரிய ஆக்களுக்கை கருத்து வேறுபாடும், மனக் கசப்புகளும் இருப்பதாக கொழும்பில எப்பவோ இருந்தே பலமாய் பேசப்பட்டது அதால சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஏதாவது மாதமாய் நடந்தாலும் என்ட பயமாம் . . . .

அடுத்தது அணிசேரா நாட்டுத் தலைவர்கள் முகத்தில எப்பிடி முழிப்பது என்ற கேள்வியும் காரணமாம்.

1983க்குப் பிறகும் இப்ப மூண்டு வருஷமாய் இனப் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லையோ என்டு, அவை முகத்தில அறைஞ்சமாதிரிக் கேட்டுவிட்டா மானம் ரோஷம் எல்லாம் போய்விடும் எல்லே? அப்பிடி ஒரு சங்கடம் உண்டாகிறதை பயணத்தை ரத்துச் செய் . . .

ஆயிறதால தவிர்க்கலாம் என்டு பெரிய மூளையள் ஏதாவது ஆலோசனை கூறியிருக்கலாம் என்டும் சொல்லுகினம்.

உந்த உட் சூட்சுமங்களை ஆர் அவிட்டுவிடுவினம் . . .

**-கொண்டோடி**

---

வடக்கு--கிழக்கு

# இணைப்புக்கு ஆதரவு தரும் முஸ்லிம் அமைப்பு

## கிழக்கில் உருவாகிறது

மட்டக்களப்பு ஆக. 17

வடக்கு—கிழக்கு இணைப்புக்குப் பூரண ஆதரவு தெரிவிக்க கிழக்கிலங்கை முஸ்லிம் அமைப்பு ஒன்று முன்வந்து உள்ளது.

முன்னாள் எம். பிக்கள் உட்பட பல முஸ்லிம் பிரமுகர்கள் ஒன்றிணைந்த கட்டணிக்கு ஆதரவாக ஓர் அமைப்பாகச் செயற்பட திட்டமிட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

கொழும்பில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களை இவர்கள் சந்தித்து இணைப்புக்கு தங்கள் பூரண ஆதரவை வெளிப்படையாகத் தெரிவிப்பர் எனவும் தெரிய வருகிறது.

இணைப்பில் முஸ்லிம்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என்று கூட்டணித் தலைவர்கள் அளித்த உறுதிமொழியை பூரணமாக நம்புவதாக இந்த முஸ்லிம் அமைப்பு அறிவிக்க இருக்கிறது

இப்படி முஸ்லிம் வட்டாரங்கள் தெரிவித்தன

(உ-எ-21)

## முல்லைத்தீவு பகுதியில் மீன்பிடிக்கச் சென்றோரிலும் இருவர் கரைசேரவில்லை

யாழ்ப்பாணம், ஆக. 17

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பகுதியிலிருந்து இருபடகுகளில் மீன்பிடிக்கச் சென்றவர்கள் கடந்த ஒரு வாரமாக கரை திரும்பவில்லை.

புதுக்குடியிருப்புப் பகுதியில் உள்ள பொக்கணைக் கடலில் மீன் பிடிப்பதற்காக உடுத்துறையிலிருந்து மீனவர்கள் செல்வது வழக்கம்.

அதே போல் கடந்த பத்தாம் திகதி இரவு மீன் பிடிக்கச் சென்ற எட்டுப் படகுகளில் ஆறு படகுகள் கரை திரும்பி விட்டன.

இரு படகுகளில் அதில் சென்ற க. நவரத்னம் (துரை) (30 வயது) வ. செல்லச்சாமி (செல்வன்) ஆகியோரும் இதுவரை கரை சேரவில்லை.

அவர்கள் சென்ற படகு பின்னர் அனாதரவான நிலையில் கரை ஒதுங்கியது

(இ-ஒ)

## மீனவர்கள் மூவர் பலி

வல்வெட்டித்துறை, ஆகஸ்ட் 17

செம்பியன்பற்றுக் கடலில் மீன்பிடிப் படகு ஒன்றை கடற்படையினர் தாக்கி மூழ்கடித்தனர்

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஒரு மீனவரும் மாதகலைச் சேர்ந்த இரு மீனவர்களும் இச் சம்பவத்தில் கொல்லப்பட்டனர்.

(இ-ரி)

யாழ்.ஆஸ்பத்திரி:

## சேவையிலிருந்த ஒரே அம்புலன்ஸும் பழுது

யாழ்ப்பாணம், ஆக. 17

யாழ் - ஆஸ்பத்திரியில் சேவையில் இருந்த ஒரே அம்புலன்ஸும் பழுதடைந்து விட்டது

இதற்கான உதிரிப்பாகம் கொழும்பில் இருந்து வர இருப்பதால் உடனடியாக இதனைத் திருத்தி சேவையில் ஈடுபடுத்தும் வாய்ப்பு இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அண்மையில் காதர் அரசினால் ஆஸ்பத்திரிக்கு வழங்கப்பட்ட பழைய அம்புலன்ஸும் இன்னும் திருத்த வேலைகளுக்காக கராஜிலேயே நிற்கிறது

ஆஸ்பத்திரியில் பராமரிப்பு வேலைகளுக்கு என ஒதுக்கிய ஆஸ்பத்திரியின் ஒரே லொறியும் திருத்த வேலைகளுக்காக விடப்பட்டுள்ளது.

(இ-10)

## மின்கம்பத் தண்டனை

மட்டக்களப்பு, ஆக 17

மட்டக்களப்பு—செங்கலடி வீதியில் நேற்று இனந்தெரியாத தமிழர் ஒருவருக்கு மின்கம்ப மரண தண்டனை விதிக்கப்பட்டது.

அவருக்கு அருகில் 'மார்மைட்' போத்தல் ஒன்று காணப்பட்டது "மார்மைட் போத்தலுக்குள் கிரனேட் உள்ளது"- என்று கூறி வர்த்தகர்களைப் பயமுறுத்தி இந்த நபர் பணம் சேகரித்து வந்தார் என்று கூறப்படுகிறது.

(இ-எ-21)

## மாணவர் அமைப்புக்குழு துண்டுப் பிரசுரம்

யாழ்ப்பாணம், ஆக. 17

யாழ் பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்குழுவின் பெயரில் "மக்களே சிந்தியுங்கள், உண்மை நிலையினை புரிந்து கொள்ளுங்கள்" என்னும் தலைப்பில் துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டிருக்கிறது

மாணவர் அமைப்புக் குழுவினால் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள் தேச நலனுக்கு குந்தகம் ஏற்படாத வகையில் மாணவர்களது ஜனநாயக உரிமைகளுக்கான கோரிக்கைகளாகவே இருந்தன.

இதைச் சரியாக புரிந்து கொள்ளாமல் சில 'பாடசாலை மாணவர்கள்' என்ற பெயரிலும், சில அமைப்புக்களினாலும் வெளியிடப்பட்ட உண்மைக்குப் புறம்பான கருத்துக்களை நாம் மறுக்கிறோம். வன்மையாகக் கண்டிக்கிறோம் என்று அந்தத் துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

(அ)

## ● இந்த கிரனேட்டும் பாக் தயாரிப்பே

கொழும்பு, ஆக. 17

இலங்கை மக்கள் கட்சிச் செயலாளர் விஜய குமாரணதுங்காவின் கொழும்பு வீட்டுக்கும் அண்மையில் வீசப்பட்டதும் பாகிஸ்தான் தயாரிப்பான கிரனேட் ஆகும். இக்கிரனேட் 1980 இல் பாகிஸ்தானில் தயாரிக்கப்பட்ட உற்பத்தி என்று கொழும்பு பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏற்கனவே லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவின் வீட்டுக்கும் வீசப்பட்ட கிரனேட்டும் பாகிஸ்தான் உற்பத்தியே என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இரண்டு கிரனேட்டுக்களும் வெடிக்கவில்லை.

(இ-எ)

## கிறிஸ்துவை....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

களே, என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே. அப்படியிருந்தும் உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனமாற்றம் ஏற்படவில்லையே.

## மினிபஸ்ஸில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதில் இருவரும் வீரமரணமடைந்தனர். இவர்களுடைய உடல்கள் நேற்று எம்மால் மீட்டெடுக்கப்பட்டன

சுமாண்டோக்கள் சுட்டு வீரமரணமடைந்த சுகு, குமார் ஆகிய இருவருக்கும் எமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம் இதுவரை எமது இயக்க வீரர்கள் 339 பேர் தம் இன்னுயிர்களை ஈந்துள்ளனர்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெரியஉப்போடை சுற்றி வளைப்பு

மட்டக்களப்பு, ஆக. 17

மட்டுநகரில் பெரிய உப்போடைப் பகுதியில் நேற்று காலை 5. 30மணி முதல் 10 30 மணி வரை ஆயுதப்படையினர் தேடுதலில் ஈடுபட்டனர்

15 - 30 வயதுக்குட்பட்ட சுமார் 400 தமிழ் இளைஞர்கள் படையினரால் கல்லடி முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு 10 முகமூடி நபர்கள் முன்னால் இவர்கள் 'ஆஜர்' செய்யப்பட்டனர்.

முகமூடிகளின் 'தலையாட்டலுக்கு' இலக்கான 7 தமிழ் இளைஞர்களை மேலும் விசாரணைக்காகத் தடுத்து வைத்துக் கொண்டு, ஏனையோரை படையினர் நேற்று மாலையே விடுவித்தனர்.

(இ-எ-21)

## நயினையில் தாக சாந்தி மண்டபம்

நயினாதீவு, ஆக. 17

நயினாதீவு இந்து கலாசார அபிவிருத்திச் சபை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் மகோற்சவத்தை முன்னிட்டு இம்முறையும் தாகசாந்தி மண்டபம் அமைத்துள்ளது

சப்பறத் திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தத்திருவிழா, தெப்பத் திருவிழா (17- 8- 86- 20- 8- 86) காலங்களில் அடியார்களுக்குத் தாகசாந்திப் பணியும் அருள் பிரசாதம் வழங்கும் பணியும் இச்சபையால் மேற்கொள்ளப்படும்.

(இ)

## கண்டாவளையில் நடந்த மோதல்

யாழ்ப்பாணம், ஆக 17

நேற்று சனிக்கிழமை கண்டாவளையில் சிப்பாய்களுக்கும் மக்கள் விடுதலைப் படையினருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டதாக ஈ. பி. ஆர். எல். எவ் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

நேற்றுக் காலை 10 மணிக்கும் 11 05க்கும் இடையில் இந்த மோதல் நடந்தது.

இரு ஹெலிக்கொப்டர்களில் வந்து சுற்றி வளைத்த முற்றுகையிட்ட சிப்பாய்களையே மக்கள் விடுதலைப் படையினர் தாக்கினர்.

திரும்பிச் சென்ற சிப்பாய்கள் மீண்டும் வந்து அங்கிருந்த பொது மக்களின் வாகனங்களைத் தாக்கினர் என்றும் ஈ பி ஆர். எல் எவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

(இ)

## உல்லாசப்....

மஹரகம, அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் இருந்து பால வனவிலங்கு சரணாலயத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-எ)

## முஸ்லிம்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றுக் கொண்டிருந்தது.

உடனே தொழிலாளர்கள் நிலத்தில் படுத்துக் கொண்டனர்.

அப்போது பக்கீர் முகைதீன் செய்யது ஹுசேன் என்பவர் உயிரிழந்தார்.

இவரின் வயது 32.

(இ-எ-150)

## அரசு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காரங்கள் பற்றியும்.

மாகாண சட்டசபைகள் முதலமைச்சர்களுக்கு வழங்கப்படவுள்ள சட்டவாக்க, நிறைவேற்று அதிகாரங்கள் பற்றியும் ஷரத்து வாரியாக ஆராயப்பட்டன என்று தெரியவருகிறது

(இ-எ)

## ஆயுததொழி..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை.

அண்மையில் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி ஐரோப்பிய நாடு ஒன்றுக்கு விஜயம் செய்து விட்டுத் திரும்பியதும் தெரிந்ததே

(அ-எ)

## நேற்றைய...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ழு இம்மாதம் 25 அல்லது 26 ஆம் திகதி சென்னை திரும்பும்

இன்று (ஞாயிறு) நடைபெறும் பேச்சுக்களை அடுத்து, 3 அல்லது 4 தினங்கள் இடைவெளியின் பின்னரே அரசு—கூட்டணிப் பேச்சுக்கள் நடக்கும் என்றும் தெரிகிறது.

(அ-எ)

## ஆலயம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களின் பின் கொடியேற்றத்துடன் திருநாள் நடைபெற்று வந்தது.

பண்ணை வீதிக்கும் குருசடித்தீவுக்கும் இடையில் பரவைக் கடலாலைப் படியால் பக்தர்கள் ஆலயத்திற்கு நடந்து செல்வது வழக்கம்.

இவ்வருடம் பண்ணை வீதியில் இராணுவம் முகாமிட்டிருந்த படியால் யாழ் ஆயர் உத்தரவுப் படி திருநாள் ரத்துச் செய்யப்பட்டது.

கடல் வலயச் சட்டத்தால் இத்தீவில் தங்கி மீன்பிடித் தொழில் செய்யும் மீனவர்கள் குருசடித்தீவுக்குச் செல்வதை நிறுத்திவிட்டனர்.

ஆலயம் அனாதரவான நிலையில் இருந்தது. இந்நிலையில் நேற்று அதிகாலை இதுகுண்டுவைத்து தகர்க்கப்பட்டது

(இ)

## கலமுனை. ...

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

களின் அகதி ஆலைகளில் தடுத்து வைக்கப்பட்டதாகக் கூறப்படும் வெளியூர்த் தமிழ்த் தொழிலாளர்களை விடுவிக்கும் படி அம்பாறை மாவட்ட உழைக்கும்தொழிலாளர் சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

(இ-எ-84)

---

## விளையாட்டரங்கு

மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் ஆட்டம்

# ஷப்ரு வெற்றிக்கிண்ண போட்டி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஆக 17

'ஷப்ரு' வெற்றிக்கிண்ணத்துக்கான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் 'நொக்கவுட்' போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன

யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரியின் ஆயர் தியோகுப்பிள்ளை அரங்கில் நடைபெறும் இந்த ஆட்டங்களை சென் பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண. பிதா. ஜி. ஏ. பிரான்சிஸ் யோசப் அவர்கள் இன்று காலை 8 00 மணிக்கு சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைப்பார்

30 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் அடிப்படையில் நடைபெறும் முதலாவது ஆட்டத்தில் சாங்கேசன் சிமெந்து அணியை எதிர்த்து மல்லாகம் கிராம அபிவிருத்தி சங்க விளையாட்டுக் கழக அணிமோதும்

இன்று பிற்பகல் நடைபெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்ரலைட்ஸ் நீல அணியும். கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழக அணியும் மோதுகின்றன

முதலாவது ஆட்டம் இன்று காலை 8. 30 மணிக்கும் இரண்டாவது ஆட்டம் பிற்பகல் 1 15 மணிக்கும் ஆரம்பமாகும்.

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் 25 ஆவது வருட நிறைவை ஒட்டி யாழ்ப்பாணம் ஷப்ரு யுனிக்கோ பிரண்ஸ் நிறுவனத்தின் ஆதரவில் இந்தப் போட்டி நடத்தப்படுகிறது.

போட்டியின் இரண்டாவது முன்றுவது ஆட்டங்கள் நாளை திங்கட்கிழமை நடைபெறும்

(உ)

## உதைபந்தாட்ட சங்கத்திற்கு புதிய செயலாளர்

யாழ்ப்பாணம், ஆக 17

யாழ் உதைபந்தாட்டச் சங்கத்தின் (லீக்) செயலாளராக திரு எம். தேவதாஸும் உபசெயலாளராக திரு. க.அருட்செல்வரத்தினமும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்றசெயற்குழுக் கூட்டத்தில் இத்தெரிவுகள் இடம்பெற்றன.

யாழ் உதைபந்தாட்டச் சங்கத்தின் (லீக்) முன்னாள் செயலாளர் திரு, க. குமாரசாமியின் ராஜினாமாவும் கூட்டத்தில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

(இ)

எங்கள் சேவை

விற்பனைக்கு

புத்தம் புதிய ஐந்து அந்தர் மேடைத்தராசு ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவும் அம்பாள் ஹாட்வெயர்ஸ், நீர்வேலி சந்தி.

ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு
நவா மினியில்
புலி ஜோ
TIGER JOE-A
மாபெரும் புரட்சிப்படம்
A- 18 வயதுக்குட்பட்டோர் அனுமதி இல்லை.

வீடியோ...
வீடியோ... வீடியோ...
குறைந்த செலவு
சிறந்த படப்பிடிப்பு
நிறைந்த வர்ணம்
✱
வாணி வீடியோ ஹோம்
கடந்த 3 வருட காலமாக அனுபவம் வாய்ந்த படப்பிடிப்பாளர்களைக் கொண்டு இயங்கி வருகிறது
வாணி
வீடியோ ஹோம்
கிளை நிலையம்:
வாணி வீடியோ ஹோம் கே. கே எஸ் வீதி, வல்வெட்டித்துறை
வாணி வீடியோ ஹோம் பிரதான வீதி உடுப்பிட்டி.

உங்கள் சேமிப்புகட்கு
★ உயர் வட்டி
★ பாதுகாப்பு
★ தேவையான நேரத்தில் பணமாகப் பெறும் வாய்ப்பு
ஆரம்பம்: 18-08-1986
அனைத்தையும் ஒருங்கே வழங்கும் நிறுவனம்
அபிவிருத்தி நிதியம்
337, கஸ்தூரியார் வீதி, (கன்னாதிட்டி)
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலையவீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 17 — 08 — 1986

Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 15 Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka Under Number QJ 60 N 86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org